RECEIVED
1979-9-03
PERIODICALS DIVISION
UNIVERSITY OF JAFFNA CAMPUS ★ LIBRARY ★

துரித மீட்டல் வகுப்புகள்
G C E new O/L வகுப்புகள்
(1979 டிசம்பர் பரீட்சை)
விசேட ஆங்கில வகுப்புகள்
ஆரம்பம் 1-9-79
கல்வி போதனுநிலையம்
34, பலாலிவீதி, யாழ்ப்பாணம்.
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice,
Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 ஆவணி 18 ஷவ்வா 10 இதழ் 203
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3-9-79

வெக்டரின் புதிய
கணித வகுப்புக்கள்
ஆரம்பம் 9-9-79
பௌதிகம் (வெப்பவியல்)
ஆரம்பம் 15-9-79
புதிய பௌதிக இரசாயன வகுப்பு
ஆரம்பம் 3-9-79
விபரங்கட்கு :
நிர்வாகி,
விஞ்ஞான கலாசாலை
ஆர். ஜீ. கட்டிடம்,
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
3477

# அணிசேரா உச்சிமாநாடு
# இன்று ஹவானுவில் ஆரம்பம்

## சோவியத் தலையீடு குற்றச்சாட்டுக்கு
## கியூபா நகல் பிரகடனம் கடும் எதிர்ப்பு

(ஹவானு)

**அணிசேரா நாடுகளின் ஆருவது உச்சிமகாநாடு இன்று இங்கு ஆரம்பமாகிறது.**

சர்ச்சைக்குரிய பல பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ள இம்மாநாட்டில் 96 நாடுகளைச் சேர்ந்த 60 அரசுத் தலைவர்களும், பிரதமர்களும், 37 வெளியுறவு அமைச்சர்களும் கலந்துகொள்கின்றனர்.

குறிப்பிட்ட ஒரு வல்லரசான சோவியத் தலையீடு கடுமையாக இருப்பதாக பொதுவாக பல நாடுகளின் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளபோதிலும் கியூபா இன்று சமர்ப்பித்துள்ள நகல் பிரகடன அறிக்கையுள் இக்குற்றச்சாட்டை வன்மையாகக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கம்பூச்சியா விவகாரத்தில் சிக்கல் மகாநாட்டில் தீர்மானம் முடிவுகாணும் தீர்ப்பை உச்சி மகாநாடே கண்டறியவேண்டும் எனும் நிறைவேற்றப்பட்டுள்ள இப்பிரச்னை ஒரு சர்ச்சைக்குரி என்று வெளிவிவகாரங்களை சிக்குரியதாக நீடிக்கும் என்று மாநாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மகாநாடு 7ம் திகதி முடிவடைகிறது.

### குடும்ப நீதிமன்றம் இன்று ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் குடும்பநீதி மன்றம் இன்றுகாலை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

யாழ் குடும்ப நீதிமன்ற நீதவானுக திரு. எம். டி ஜேசுரத்தினம் கடமையாற்றுவார். [ஈ]

## ''மனச்சாட்சியின்படியே நான் செயல்பட்டேன்''
### திருப்பதியில் பாரத ராஷ்டிரபதி

[திருப்பதி]

''மத்திய அமைச்சரவை விஷயத்தில், நான் எனது மனச்சாட்சியின்படியே நடந்தேன்'' என்று பாரத ராஷ்டிரபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி இங்கு தெரிவித்துள்ளார்.

திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக்கழக வைபவமொன்றில் கலந்துகொண்ட ராஷ்டிரபதி சஞ்சீவரெட்டி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்; ''நான் சாதாரண பண்ணைத் தொழிலாளியாக இருந்து மிகஉயர்ந்த இப்பதவிக்கு வந்தவன். மத்திய அமைச்சரவை விஷயத்தைப் பொறுத்தவரை அவ்வது

6ம் பக்கம் பார்க்க

## கிணற்றில்விழுந்த யானைக்கு
### உணவு வழங்கிவரும் யானைகள்!

[மட்டுவில்]

கிணறென்றில் தவறி விழுந்த யானையொன்று கடந்த ஐந்து நாட்களாக யாராலும் மீட்கப்படாத நிலையில் தொடர்ந்து தனது உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறது.

விசுவமடு, தொட்டிலடியிலுள்ள ஐயாசரத்தினம் பற்குணநாதனின் கிணற்றில் தண்ணீர் குடிக்க முயற்சித்த போது தவறி விழுந்ததாகக் கூறப்படும் இந்த யானையினை தினமும் பொதுமக்கள் பலரும் பார்த்து வருவதுடன் அதற்கு தேவையான உணவுகளையும் வழங்கி வருகின்றனர்.

இதேவேளை தினமும் இரவு வேளைகளில் யானைகள் கூட்டம் கூட்டமாக அவ்விடத்துக்கு வந்து இலை, குழைகளை கிணற்றில் வீசிவருவது பார்ப்பதற்கு பெரும் அதிசயமாகவும் அற்புதமாகவும் இருக்கிறது.

## திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர் !

நிகழும் சித்தார்த்தி வருடம் ஆவணி மாதம் 18-ம் திகதி (4-9-79) செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் வரும் சிங்கலக்கின சுப முகூர்த்தத்தில்,

### கீதா சாறி சென்டர்
### Geetha Saree Centre

என்னும் பிடவைமாளிகையை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால், இவ்வைபவம் தாங்களும் சமூகந்தந்து திறப்புவிழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றேன்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
எஸ் சோதிநாதன்
(வீனஸ் இன்டஸ்றீஸ்)

180, நவீனசந்தை,
(உள்பக்கம்)
யாழ்ப்பாணம்.

3486

### யாழ். மாவட்ட அபிவிருத்தி
## குறுகியநீண்டகாலத்திட்டம்
## யாழ் அரச அதிபர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

''1980ம் ஆண்டில் வடமாகாண அபிவிருத்தியில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்கே அரசு முதலிடம் வழங்கியுள்ளது. எனவே இச் சந்தர்ப்பத்தை நாம் நல்ல முறையில் பயன்படுத்தி, யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு துறைகளையும் அபிவிருத்தி செய்யவேண்டும்''

இவ்வாறு, யாழ்ப்பாண மாவட்ட அமைச்சரின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திர துரைசுவாமி, யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தினை திட்டமிடல்'' ஆய்வரங்கின் 2ம் நாள் நிகழ்ச்சியில் தொகுப்புரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஆய்வரங்கு யாழ்ப்பாண செயலக வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது;

திரு யோகேந்திரா துரைசுவாமி தொடர்ந்து தொகுப்புரை நிகழ்த்துகையில் கூறியதாவது!

யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்காக குறுகியகாலத் திட்டங்கள், நீண்டகாலத் திட்டங்கள், என்று இரண்டு வகைப்பட்ட திட்டங்கள் செயற்படுத்தப்படவிருக்கின்றன. குறுகியகாலத் திட்டமாக 1980ம் செயற்பாடு அடைய க்கூடியவிதமாக மூன்று பாரிய திட்டங்களான முழங்காவில் படித்த வாலிபர் குடியேற்றம், பருத்தித்துறை கண்ணாடித் தொழிற்சாலை, ஐஸ் உற்பத்திநிலையம் ஆகியவை நிறைவேற்றப்படும். நீண்டகாலத் திட்டமாக, 1980ல் மூன்று அல்லது ஐந்து

[6-ம் பக்கம் பார்க்க]

### யாழ். லயன்ஸ் கழகம் அளிக்கும் அடிப்படை ஆங்கிலப் பயிற்சி

குறைந்த செலவில் பயிற்சி பெறுவதற்கு தேவையான தகமைகள்

வெளிநாடுகளில் தொழில் பெற்றுச் செல்ல எண்ணமுடையவர்கள் அந்தத் தொழில்களுக்கு ஏற்ற அனுபவமும் அறிவும், உணவு முத்திரைகள் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

15-09-'79-ல் 30 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 15-09-'79க்கு முன் தலைவர், யாழ். லயன்ஸ் கழகம், 2, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

3487

## விளம்பரம்

### விற்பனைக்கு

தேயிலை வெற்றுப்பெட்டிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- அன்னை தொழிலகம், இணுவில். 3473

நல்ல நிலைமையில் உள்ள 12 கைத்தறிகள் வாப்பிங் ரோளர் உட்பட சகல உபகரணங்களுடனும் விற்பனைக்குண்டு செ. த. குகானந்தம், 78, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 3481

பேபி சிலிண்டருடன் அச்சகம் விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ளுங்கள். 480, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 3482

வெலொரசோலெக்ஸ் 8 ஸ்ரீ தொடர். நல்ல நிலையில். விலை 3700/-க்குமேல். முந்துவோருக்கு 500/- பெறுமதியான புது உதிரிப்பாகங்கள் வழங்கப்படும். நாவேந்தன், ஏழாலை-வடக்கு, ஏழாலை. 3483

### தேவை

நாகம்ஸ் பாட்டாசாலனி ஸ்தாபனத்திற்கு மனேஜர் தேவை. 20 வயதிற்கு மேற்பட்ட G.C.E. O/L கணிதத்தில் சித்தியடைந்த, கணக்கு வைத்தலில் அனுபவமுள்ளவர் மட்டும் 7-9-79 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். சம்பளம் அனுபவத்திற்கு ஏற்றவாறு திருப்திகரமாக வழங்கப்படும். நாகம்ஸ் பாட்டா, 10, புதிய மார்க்கட் கன்னாகம். 3470

பீடி சுற்றுவதில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை நேரில் தொடர்புகொள்ளவும் தர். கனகலிங்கம், (D K) 3 "A" முஸ்லிம் கல்லூரி வீதி கொட்டடி (அடனுர்கு அண்மையில் யாழ்ப்பாணம் 3489

**Y. M. C. A. TALENT CONTEST IN WESTERN MUSIC**
[Vocal & Instrumental]
Saturday 29th September, 1979 At St. John's College;
Entries Close on 15-9-1979.
Details from:
M. Thambithurai,
Business Secretary,
Y. M. C. A
Jaffna
3475

**அ.சே.எ. அதிசிறப்புப் பரீட்சை**
கணக்கியல் முறைமைகள் ஆகிய
**பாடநெறிக் குறிப்புகள்**
பெறவிரும்புவோர் பின்வரும் முகவரிக்கு எழுதுக
**சி. எஸ். சின்னையா**
முன்னைநாள் இ. நி. சே. முகாமை விரிவுரையாளர்
148/3 சின்சிவீதி
பொறளை
3459 கொழும்பு-8

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர ஆகஸ்ட் 1980பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது.

அக்கடமிகாரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்,

விண்ணப்பங்கள் 17-9-79 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் மாணவ, மாணவிகள் தெரிந்து எடுக்கப்படுவர்.

அதிபர்,
தொலைபேசி எண்: 617,
376, பிரதான வீதி,
சுன்னாகம்.
யாழ்ப்பாணம்: 3472

## ஆலயத்திற்கு மின்னிணைப்பு

[நெல்லியடி]
வதிரி கதிர்காமகோவிலுக்கு புதிதாக மின்னிணைப்பு செய்யப்பட்டுள்ளது வதிரியைச் சேர்ந்த சமூகசேவையாளர் திரு. ஆ. நடராசா மின்னிணைப்பிற்கான செலவுகளைப் பொறுப்பேற்றிருந்தார். [கு]

## இலவசம்

[யாழ்ப்பாணம்]
விஜயதசமி அன்று வித்தியாரம்பம் செய்யும் பாடசாலைகளுக்கும், சிறுவர் கல்வி நிலையங்களுக்கும் அரிச்சுவடி ஏடுகளை இலவசமாக வழங்க யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தார் முன்வந்துள்ளார்கள். பெற்றுக்கொள்ள விரும்பும் மேற்படி நிலையங்கள் விண்ணப்பித்து இலவசமாக நேரில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவித்துள்ளனர்.

## முழங்காவிலுக்கு மூன்றரை லட்சம் ரூபா

[வன்னூர்பனிலோ]
கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த முழங்காவில் இளைஞர் குடியேற்றத்திட்ட முதலாம் பகுதிக்கு பிரதேச அபிவிருத்தி அமைச்சர் நிதிஒதுக்கீட்டின் கீழ் மூன்றரை லட்சம்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கான நீர்ப்பாசன வேலைகளுக்கு வாய்க்கால் வெட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் முதலாம் பகுதியைச் சேர்ந்த 80 இளைஞர்களும் இத்திட்டத்தில் உடனடியாக விடமைத்து பயிர்ச்செய்கைக்கு ஆயத்தம் செய்யுமாறு.காணி உத்தியோகத்தரினால் கேட்கப்பட்டுள்ளனர். மாவட்டக்காணி உத்தியோகத்தர் திரு எஸ் கணேசநாதன், இப்பகுதிக்குப் பொறுப்பான காணிமேற்பார்வையாளர் திரு வி கோமேஸ்வரன் ஆகியோர் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். [இ]

**நல்லூர் ப. நோ. கூ. சங்கம்**

## கேள்விப்பத்திரம்- கட்டிடக் கூலிக்காரர்

நல்லூர் ப. நோ. கூ. சங்க களஞ்சியக்கட்டிடம் கட்டுவதற்கு பதிவுசெய்யப்பட்ட கூலி ஒப்பந்தகாரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டிடத்தின் அளவு 1200 சதுரஅடியாகும். விண்ணப்பிக்கவிரும்புவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்திற்கு ரூபா 2/-ம், வைப்புப்பணமாக ரூபா 500/-ம் செலுத்தி கூலி வேலை விபர விண்ணப்பப் படிவத்தை 3-9-79ம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 8-9-79ம் திகதிக்குமுன்பதிவுத் தபாலில் சங்க முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
நல்லூர் ப.நோ.கூ சங்கம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
3485

## மயூரா சின்டிகேற் [MAYURA SYNDICATE] ஸ்தாபனத்தாரின்

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்களாக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

கீழ்க்காணும் மயூரா உற்பத்திப்பொருட்கள் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

| | |
|---|---|
| ஜில் (Gil) பெல்ஸ் | ரூ.140-00 |
| கொட்டுறேய்(Corduroy)ஜீன்ஸ் | " 175-00 |
| டெனிம் (Denim) ஜீன்ஸ் | " 160-00 |
| டெனிம் (Denim) ஸ்கேட் | " 110-00 |
| மயூரா(Mayura) பெல்ஸ்பெண்கள் | " 130-00 |
| மயூரா(Mayura) ஸ்கேட் | " 110-00 |
| இன்ரநெஷனல்(Interanational)சேட் | " 90-00 |
| ராங்கிலர் (Wranglar) | ,, " 120-00 |
| சேட்வகைகள் | " 65-00 |
| சேட்டுக்கள் (Gil) சிறுவர்கள் | ' 80-00 |

## லிங்கம் சில்க் ஹவுஸ்

18, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

வீடுகட்டக் கூடிய காணிகள்

கீரிமலை-காங்கேசன்துறை வீதியில் கடலுக்கும் வீதிக்கும் இடையில் வீதி (றோட்டு) முகப்புள்ள 4 பரப்பு விஸ்தீரணம் கொண்ட சதுரமான ஒரு துண்டுக் காணியும், இக்காணிக்குப் பின்புறமாக பிரதான வீதியிலிருந்து போக்குவரவு பண்ணக் கூடிய வழியுள்ளதும், 3 பரப்பு 4⅓குளி விஸ்தீரணம் கொண்டதுமான இன்னுமொருகாணியும் விற்பனைக்கு உள்ளன.

கேள்விகள் இரண்டுகாணிக்கும் மொத்தமாகவும் பிரிப்பு பிரிம்பாகவும் எழுதி பதிவுத் தபாலில் கௌரவ காரியதரிசி மலாய இலங்கையர் சங்கம், 54, பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 15 9-79க்கு முன் அனுப்ப வேண்டும். முழுவிபரங்களும் மேற்படி சங்கத்திடமிருந்து அறியலாம். பினாலும் பார்க்கலாம் இடத்தைக் காண்பிக்கில் திரு. வி சரவணமுத்து, ஜே பி சொல்லன்கலட்டியுடன் தொடர்புகொள்ளவும். 3479

மு. சபாநாதன்
சட்டத்தரணியும்,
நொத்தாரிசும்
வட்டுக்கோட்டை:

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பருத்தித்துறை, தும்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் திருநாவுக்கரசு பெண் விழுமவிசோதி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்திவர்
சுப்பிரமணியம் திருநாவுக்கரசு 72ஏ றெம்பின் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதாரர்
மரணசாதன) இல.
நியாயாதிக்கம்) 3456

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

1979 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது
3466

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
தெல்லிப்பழை இழக்கு என்னுமிடத்தைச் சேர்ந்த சரவணமுத்து விஜயமூர்த்தி என்பவரினது மரண சாதனத்தினை எழுத்தாவணத்தினது விடயத்தில்

மரணமெய்தியவர்
பொன்னம்பலம்
சண்முகலிங்கம்
தெல்லிப்பழை இழக்கு
மரணசாதன மனுதாரர்
நியாயாதிக்கம் இல. 39 ரி.
எதிராக
பொன்னம்பலம் யோகலிங்கம்
தெல்லிப்பழை இழக்கு
எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ம் ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)
மூ. நல்லலிங்கம்
பதிவாளர்
தயாரித்தவர்
(ஒப்பம்)
ம. சிதம்பரநாதன்
மனுதாரின் சட்டத்தரணி
3480

## முருகன் கோவில் செல்வச்சந்நிதி நிர்வாகம்

## வேண்டுகோள்

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் சார்பாக எந்தத் தனிநபர்களோ அன்றி மன்றங்களோ ஆலயத்துடன் தொடர்புள்ளவர்களோ பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டுவதற்கு அல்லது பண்டங்கள் சேகரிப்பதற்கு நிர்வாகம் அனுமதிக்கவில்லை. நன்கொடைகள் அல்லது தர்மப்பணிகள் வழங்க விரும்புவோர் ஆலய நிர்வாகிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றோம். ஆலயம் சார்பாக நிதியோ பொருளோ திரட்டவேண்டிய அவசியம் இல்லை.

உலக குருநாத ஐயர்
ஆலய நிர்வாகி 3366

தேரிற் பவனி வரும் தெல்லியூர் துர்க்காதேவி அம்பாளிடம் பக்திப் பரவசத்தில் மூழ்கிக் கிடக்கும் அடியார்களுக்கும், அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் அன்னையின் அருள்பாலிக்க

## துர்க்கா தங்க மாளிகை

சார்பில் பிரார்த்திக்கின்றேம்!

மனதைக் கவரும் மாற்றுக்குறையாத
தங்க, வைர நகைகளுக்கு
நம்பகமான ஸ்தாபனம்--

## துர்க்கா தங்க மாளிகை

பிரதானவீதி, பண்டத்தரிப்பு.
3484

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## துர்க்கை அம்பாள் இன்று ரதபவனி

# அடுத்த ஆண்டுற்சவத்தின் முன் ராஜகோபுரம் தரிசிப்போம்

(இன்று காலை தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழா நடைபெறுவதை யொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது )

அன்னை பராசக்தி துர்க்கையாக எழுந்தருளித் திருவருள் பொழியும் திருத்தலமாகிய தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறுகிறது

அம்பாள் ஆலயம் புதுக்கு விக்கப்பட்டு 1965-ம் ஆண்டு ஆவணித் திங்கள் திருவோணத்தில் மகாகும்பாபிஷேகம் நடந்தேறிய பின் அம்பிகையின் திருவருளைப் பெறவழி பாடியற்றும் பக்தர்களின் எண்ணிக்கை பன்மடங்காகப் பெருகுவதுடன் வருடா வருடம் மகோற்சவங்கள் பக்தி சிரத்தையுடன் சிறப்பாக நடைபெறுவதும் துர்க்கா தேவியின் அருட்பாலிப்பேயாகும்.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற நியதிக்கு அப்பர் பெருமான் துய்த்த பேரின்பத்தை யார் துய்ப்பர். தெல்லிப்பழை வாழ் சைவ இளைஞர்கள் சென்ற பதினேந்தாண்டு காலமாக துர்க்கா தேவி ஆலயத்தில் தெய்வத் தொண்டாற்றி நற்பயன் பெறுவதும், உள்ளூர், வெளியூர் அம்பாள் பக்தர்களின் பேராதரவும் பெற்று ஆலய நிர்வாகசபைத் தொண்டர்கள் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஆலயத்திருத்தொண்டுகள் சிறப்பாக நடாத்துவதும். ஆலயத்திருப்பணிகள் ஒவ்வொன்றும் முறையாக முட்டின்றி இயற்றப்பட்டு அம்பாள் ஆலயம் புதுப் பொலிவு பெறுவதும் துர்க்கையின் கருணையேயாகும்.

சென்ற ஆண்டு மகோற்சவத்தின் போது இரதோற்சவ நாளில் புதிய சித்திரத் தேரில் அன்னை துர்க்கை திருப்பவனி வந்த திருக்காட்சியைப் பக்தர்கள் தரிசித்து அருள் பெற்றனர். அடுத்த ஆண்டு மகோற்சவத்திற்கு முன் இராசகோபுரத் திருப்பணி நிறைவெய்தி நாம் திருக்கோபுர தரிசனை பெற அன்னை துர்க்காதேவியை வணங்குவோமாக.

சு. சிவவாகீசர்

[காரியதரிசி துர்மகர்த்தா சபை]

## 'எயர் லங்கா' விமான சேவை ஆரம்பமாகியது

[கொழும்பு]

இலங்கையின் புதியவிமான சேவையான "எயர் லங்கா" தனது முதலாவது சேவையை நேற்று முன்தினம் பகல் பாங்கொக்கிற்கு நடத்தியது.

இதுதொடர்பான வைபவத்தில் பிரதமர் திரு. ஆர். பிரேமதாச பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

[செ]

# அளவையூர் நாகதம்பிரான் இன்று கும்பாபிஷேகம்

நாகதம்பிரான் என்ற நாமம் வந்ததும், இரு மூர்த்திகளின் நினைவு வருகிறது ஒருவர் நாகம் புனைந்த சிவன் மற்றவர் நாகத்திற் பள்ளி கொண்ட நாராயணர் எப்படிப் பொருள்கொளினும் இருவரும் ஒரே உருவத்திலடங்குவர்.

கிருஷ்ணர் என்னும் நாமம், பூமியை அகழ்ந்து சென்றவன், காப்பவன், சமுத்திரத்தினின்றும் பூமியை மீட்டவன் எனப் பல்பொருள்படும். காத்தற் கடவுளாக நின்றவனைக் கருத்தாவாகக் கொள்ளும் சமயம் வைஷ்ணவம். ஆயினும் அவன் எல்லாச் சீவராசிகளிடத்திலும் வேண்டுவோர் வேண்டும் வடிவில் காட்சி காட்டித் தண்ணருள் புரிகின்

நாராயணமூர்த்தி அளவெட்டி தெற்கில், கும்பளாவத்தை என்ற இடத்தில் வாலைமரத் தடியில் வெண்ணிற நல்ல பாம்பாகக் காட்சிகாட்டி இற்றைக்குச் சுமார் இருநூறு ஆண்டுகளுக்குமுன்பே கோயில் கொண்டவர். சிறு குடிசையாய்க் கிடந்த ஆலயம், இன்று மலர்ந்து, அடியார் பலர் இஷ்டசித்திகள் பெற்று நலம்பெறும். அற்புதம் நிறைந்த திருத்தலமாய், பொன்னுயர் புதுக்கோயிலாய் மிளிர்கிறது. அடியார்களின் முயற்சியாய் இன்று நாகதம்பிரான் என வழங்கிவரப்பட்ட நாக வரதநாராயணனுக்கு பெருஞ் சாந்தியென்னும் கும்பாபிஷே

## துர்க்கையே நீ வாழ்கவே!

நல்லிதய கொள்கைகள் நாவே உதிர்த்தவினை
  நலிந்தே தொலைந்துபோக
வல்லிநீ வர்க்க பரிவாரமொடு வீதியில்
  வலம்வர உளங்கொண்டு உன்
இல்லினின் எழுந்தருளல் செய்துமே யாவரும்
  இசைவான நேர்த்தி செய்ய
துல்லியப் பட்டாடை சாத்தியே மேனியில்
  தேர்ந்த பல்லங்க மெல்லாம்
அல்லியும் நெய்தலொடு ஆம்பலும் முல்லையும்
  அழகொழுகு பாணிதன்னில்
பல்வகைப்பட்ட பொன் பளபளமொடு நித்திலம்
  பதித்த இழை பூணணிந்தே
முல்லைவனம் என்றுநாம் கூறிடும்தேரினில்
  முறையோடு பவனிவருவாய்
தெல்லியம் பதியினில் கோவில் கொண்டுவிய
  துர்க்கையே நீ வாழ்கவே!

- எழினி சி. சிவநாதபிள்ளை

## அருளினை நல்கும் அருமருந்தே

அகலிருள் நீங்கிட அன்புடன் போற்ற அடியவர்கள்
புகலென வந்தனர் பூக்கள் அலர்ந்தன புட்களெல்லாம்
பகலவற் கண்டு பரிவொடு கீதம் பகர்ந்தனவால்
இகலுறு தீவினை இற்றிடப் பேரருள் ஈந்திடுவே

ஈருநி புன்னை இயலிசை யாற்பர வும்பரிசு
பாகுண வின்சொற் பவரயே சுருதிபகர்வடிவாம்
மாகுல வல்லியே மாண்புடைத் தெல்லி மனோன்
[illegible] மணியே
ஆகுலம் நீங்க அருளினை நல்கும் அருமருந்தே

மருத்தும் அமைதி மதிபொலிவுண்மை மனநிறைவும்
பெருந்திண் செழுமையும் பேரொளி யின்பம் பெரும்
  புகழும்
பொருந்தும் சிறப்புடைப் பொற்புரு வானவள்
  விண்ணகையாம்
திருந்தும் மதிபொலி தேற்றினர்க் கில்லையித் தீப்பிறப்பே.

-வ. குகசர்மா

## யாழ். பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதேச சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதேச சம்மேளன அங்குரார்ப்பணக் கூட்டம், நேற்றுக்காலை யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமை வகித்தார், யாழ். அரசாங்க மேலதிக அதிபர் திரு. ஜெகநாதன் சம்மேளனத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றினார்.

பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். சிவபாதம், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. பி. எஸ். குமாரசாமி, சாவகச்சேரி நகரசபைத் தலைவர். திரு. எஸ். கே. இரவீந்நாயகம், சமாதான நீதிபதி திரு. க. முருகரத்தினம், கல்வியதிகாரி திரு. சு. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர்.

யாழ். மாவட்டத்திலிருந்து

[4ம் பக்கம் பார்க்க]

அருட்கவி சீ. விநாசித்தம்பி

ரூன், ஸ்ரீசுப்பிரமணியபாரதியார், குழந்தையாக-தோழனாக-கண்ணம்மாவாக இன்னும் பல்வேறு அம்சங்களிற் கண்டுகளித்துக் கண்ணனைச் சிந்திக்கவைத்த மகான். ஆழ்ந்த பக்தியில் அரிநாராயணனைக் கண்டு பலனடைந்த ஆழ்வார் கதைகள் அந்தக் கோபாலனின் திருக்கூத்தையும், அருட்பாக்கியத்தையும் தெளியவைக்கின்றன. "அலகிலா விளையாட்டுடையார்" என்பார் கம்பர். இத்தகைய

கம் நிகழுகிறது; இத்திருச் செயலால் நாட்டுயர்வும், நன்மழையும், நன்னிதியும், நற்கலையும், நற்சுகமும் பெருகி மக்களெல்லாம் நிறைந்து வாழ்வார்களாக.

"ஆதித்தனிக் கோலம் ஆனாள் அடியவர்க்காய்ச்
சோதித் திருத்தூணிற் றோன்றினன்-வேதத்தின்
முன்னின்றான் வேழம் முதலே என அழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை"

# வேலணை சித்திவிநாயகர்

தெய்வங்களுள் விநாயகப் பெருமானை பாரதநாட்டில் மட்டுமல்லாது ஈழவளநாட்டின் பல்வேறு இடங்களிலும் ஆலயம் அமைத்து வணங்கப் பட்டுவருகின்றமை கண்கூடு. இலந்தைவனம் சித்திவிநாயகர் ஆலயம் வேலணையில் அமைந்து, வேண்டுவார்க்கு வேண்டுவன ஈந்து முன்னையதும் பழம்பெரும் தொன்மை வாய்ந்ததாக விளங்குகிறது.

இற்றைக்கு 200 ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்த சிதம்பரநாத முதலியாரும், அவரது துணைவியாருமான பாக்கியலெட்சுமி இருவரும் இலந்தைக்காட்டு மத்தியில் எழுந்தருளியிருந்த சித்திவிநாயகருக்கு, பரந்திருந்த தமது ஆதனங்கள் உட்படச் செல்வங்களையெல்லாம் கொடுத்து, ஆலயத்தை மெருகூட்டி நிர்வகித்துவந்தனர். வேலாயுதபிள்ளை என நாமங்கொண்ட சிதம்பரநாத முதலியாரின் மைந்தரும் ஆலயத் தொண்டுகளில் முன்னின்று உழைத்து வந்தார் ஒல்லாந்தர் ஆட்சிக் காலம் நிலவியபோது சைவாலயங்கள் இடிக்கப்பட்டுவந்தன இந்நேரத்தில் இவ்வாலயத்திற்கு அண்மித்த ஆலயம் சிதைவுறும் செய்தி கேட்டு, இவ்வாலயமும் சிதைவுறுமெண்ணம் சித்திவிநாயகரை நெற்கடைக்குள் மறைந்துவைத்துக் காப்பாற்றப்பட்ட வரலாற்றினையும் அறியக்கூடியதாகவுள்ளது.

இலந்தைக்காட்டு விநாயகர் ஆலயம் காலகதியில் வளர்ச்சியடைந்து, இன்று மகோற்சவத்தை நாடிநிற்கின்றது.

நான்கு காலப் பூசையைக் கிரமமாகக்கொண்ட இலந்தைவனம் சித்திவிநாயகருக்குத் தொடர்ந்து பத்துத் தினங்கள் விழா எடுக்கப்பட்டு, பத்தாம்நாளான இன்று தேர்த் திருவிழாவும், நாளை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறுகின்றது.

-தா. யோகநாதன்

## மக்கள் கருத்து

### நாவலர் நூற்றாண்டில் ஒரு வேண்டுகோள்

நாவலர்பெருமான் தமிழும் சைவமும் தழைத்தோங்கப் பாடுபட்டு அயராது அருந்தொண்டாற்றியவர். ஈழத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலும் பெருந்தொண்டாற்றியவர்.

எத்தனையோ நூல்களை ஆக்கியவர். பல நூல்களுக்குஉரை எழுதியவர். தமிழ் இலக்கண நூல்களை முறைப்படுத்தியவர்.

தமிழ்க் குழந்தைகளுக்கென தமிழ்ப் பாலபாடங்களை எழுதி வெளியிட்டவர். சமயநெறிகளை விளங்கவைத்த சைவ வினாவிடை நூல்களை ஆக்கியவர்.

இதுவரை சுமார் இருபத்தைந்து ஆண்டு காலவரை தமிழ்கற்ற-கற்றுவரும்-மாணவ உலகம் முறையான தமிழ்நூல்களையோ, நாவலர் நூல்களையோ கற்கவில்லையே. இலக்கண நூல்களை இவர்கள் அறியாதவர்களே.

முறையான தமிழ்படித்தவர்கள்-பண்டிதர்கள், புலவர்கள் கல்விக்கூடங்களில் தமிழ் கற்பிக்கவில்லையே! தமிழ்கற்பிப்பதற்கென நியமனங்கள் இதுவரை இல்லையே! தமிழ் ஆசிரியர்கள் பயிற்சிக் கலாசாலைகள் இருக்கின்றனவா? இக்காலத் தமிழ்ப்பாடநூல்களைப் பற்றி யாரறிவார்களோ!

இன்று நாவலர் உயிரோடிருந்தால் இந்த இழிநிலைகண்டு, தமிழ் மொழிக்கு ஏற்றங்கண்டிருக்க மாட்டாரோ?

தமிழ் நூல்களைத் தமிழ்ச் சிறுர்கள் படிக்கும் நாள் எந்நாளோ. முறையான தமிழ் கற்பிக்கத் தமிழ் ஆசிரியர்கள் நியமனம் பெறும் நாள் எந்நாளோ?

நாவலர் நூற்றாண்டுவிழாச் சபையினர், நற்றமிழ்ப் பெரியோர்கள், சமய நிறுவனங்கள், தமிழ் வளர்க்க உதவும் வள்ளல் பெருமக்கள் இன்றைய நிலையைப் போக்க முன்வந்து முன்னின்று உழைப்பார்களாக.

நாவலர் வாழ்க. நற்றமிழ் வாழ்க.

க. நா. சோதிலிங்கம்

புகையிரத நிலையவீதி,
சொக்குவில்.

# ஜே. ஆருக்கு ஹவானாவில் அமோக வரவேற்பு

ஹவானா, செப் 2

இலங்கையின் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனா, ஹவானா போய்ச்சேர்ந்ததும், விமானநிலையத்தில் கியூபா ஜனாதிபதி திரு பிடல் காஸ்ட்ரோ ஜனாதிபதியை ஆரத்தழுவி வரவேற்றார். விமான நிலையத்தில் பெருந்திரளான கியூபா நாட்டுமக்களும், கோல உடையில் காணப்பட்ட கியூபா இராணுவத்தினரும், ஜனாதிபதிக்கு தமது மரியாதையைச் செலுத்தினர்.

புரட்சிவாத இராணுவ உடையில் காணப்பட்ட கியூபா ஜனாதிபதி காஸ்ட்ரோவும், ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவும், விமான நிலையத்திலிருந்து திறந்த மோட்டார் பவனியாக ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துச்செல்லப்பட்டார்.

ஜனாதிபதி மாளிகையில் இலங்கை ஜனாதிபதியும், கியூபா ஜனாதிபதியும், சுமார் ஒருமணி நேரம்வரை பேச்சுவார்த்தை நடத்தினர்.

கியூபாவுக்கு முதல் தடவையாக வருகைதந்த இலங்கைத் தலைவர் திரு. ஜயவர்த்தனாவே என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## ரதோற்சவம்

[யாழ்ப்பாணம்]

அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 5ம் தேதி ரதோற்சவம் நடைபெறவிருக்கிறது. அன்றுகாலை 7-20 மணிக்கு வசந்தமண்டப பூஜை 9-00மணிக்கு பஞ்சவிநாயகர் தேரில் ஆரோகணிப்பர். மாலை 3 மணிக்கு மும்மூர்த்திகளும் பச்சை சாத்தி பஞ்சமுகச்சஹஸ்ர நாமார்ச்சனை நடைபெறும். (க)

## டீசல் தட்டுப்பாடு தொழிலாளர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

டீசல் எண்ணெய்க்கு யாழ்ப்பாணத்தில் நிலவும் தட்டுப்பாட்டினால் மீனவர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

ரயில்மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும் டீசல் எண்ணெய் பல நாட்களாக அனுப்பப்படாததால் யாழ்ப்பாணத்தில் கடந்தசிலநாட்களாக டீசலுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

மீன்பிடி வள்ளங்களுக்குமிக மிக அத்தியாவசியமான டீசல் தட்டுப்பாட்டால் மீன்பிடிக்கச் ஆழ்கடலுக்கு செல்லமுடியாத நிலை உருவாகியுள்ளது.

அவர்கள் மட்டுமன்றி டீசலில் இயங்கும் பல இயந்திரங்கள் கூடச் செயல்படமுடியாதிருக்கிறது. இதனால் இதனை நம்பி வாழ்க்கை நடத்தும் குடும்பங்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாகின்றன.

யாழ்ப்பாணத்தில் மாரிகாலத்தில் வயல்வேலைகள் துரிதமாக நடைபெறுவதால் விவசாயிகளுக்கு உழவுயந்திரங்களின் தேவை மிகவும் அவசியமாகவுள்ளது. இந்தநேரத்தில் டீசல் இல்லாததால் உழவுயந்திரங்கள் கூட இயங்கமுடியாத நிலை உருவாகியுள்ளது.

தினமும் யாழ்ப்பாணத்திலுள்ள டீசல்விற்பனை நிலையங்களில் உழவுயந்திரங்களும் லொறிகளும் டீசலுக்காக பல மணிநேரம் காத்துக்கிடக்கின்றன. [கோ]

## இளம் பெண்ணின் மரணத்துக்கு கருச்சிதைவு காரணமா?

[யாழ்ப்பாணம்]

திடீர் சுகயீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின் பெற்றோரினால் மாந்திரீகம் பார்க்க அழைத்துச் செல்லப்பட்ட இளம்பெண் ஒருவர் மீண்டும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். இப்பெண்ணின் பிரேத பரிசோதனையில் அவருக்குக் கருச்சிதைவு செய்யப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

பூநகரி தெற்குலத்தைச் சேர்ந்த செல்வி கமாலிங்கம் இந்திராதேவி [வயது 18] என்ற இளம்பெண் சுகயீனம் காரணமாக இம்மாதம் 26-ந் திகதி பூநகரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, பின்னர் 29-ந்திகதி பெற்றோரினால் பேய்பிடித்துள்ளதெனக்கூறி மாந்திரீகம் பார்க்க அழைத்துச்செல்லப்பட்டாராம். மீண்டும் அவர் அதேதினம் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டு அங்குமரணமானார்.

பிரேதபரிசோதனை செய்யப்பட்டபோது அவருக்குக் கருச்சிதைவு செய்யப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். எஸ். பிரான்சிஸ் பூநகரி மாவட்ட வைத்திய அதிகாரியையும், கிளிநொச்சிப்பொலிசாரையும் அடுத்த விசாரணையின்போது வருமாறு அழைத்து விசாரணையை ஒத்திவைத்தார். [இ]

## இடமாற்றம்

(புலோலி)

புலோலி கமநலச் சேவை நிலையத்திற்கு முதூர் கமநலச் சேவை நிலையத்திலிருந்து திரு பி பொன்னையா போதனாசிரியராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

புலோலி கமநலச்சேவை நிலையத்தில் விவசாயப் போதனாசிரியராகக் கடமையாற்றிவந்த திரு ஆர். தில்லையம்பலம் புளியம்பொக்கணை கமநலச்சேவை நிலையத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். [ம]

## புதிய ஜே. பி.க்கு பாராட்டு

[கொடிகாமம்]

அண்மையில் சமாதானநீதவானாக நியமனம்பெற்ற தொழிலதிபர் திரு. சி. சின்னத்துரையைப் பாராட்டி மிக்கவைத் ஸ்தாபனத்தினர் நடாத்திய பாராட்டுவிழா திரு. க. சி. குலரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் வைத்து திரு. சின்னத்துரைக்கு திரு. க. கனகராசா பொன்னாடை போர்த்திப் பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவித்தார்.

திரு. எஸ் தியாகராசா, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உட்பட பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

## "திட்டமிட்டு வாழ்க்கையை நிர்ணயிப்பது அவசியம்"

(ஏழாலை)

"இன்று இலங்கையின் குடிசனப் பெருக்கம் மிகவும், அதிகரித்துள்ளதாகவும், இறப்பு விகிதம் மூன்றாகக் குறைந்துள்ளதாகவும் இதனால் நாட்டின் அபிவிருத்தியிலும் அசுர வேகத்தில் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்நிலை நமது நாட்டுக்கு மட்டுமல்ல, முன்னேறிய நாடுகள் என்றும், சோஷலிஸ நாடுகள் என்றும் நாம் கருதுகின்ற நாடுகளுக்குமே ஒரு மிகப் பெரிய பிரச்சினையாகிவிட்டது. ஒரு கால கட்டத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் நாட்டின் செல்வம் மனித உரிமை என்று உலக அரங்கிலே கூறிய சீனாவே இன்று குடும்பநலத்திட்டத்தைக் கட்டாயமாக அனுசரித்தாக வேண்டும் என்று தனதுநாட்டு மக்களுக்குச் சட்டம் போட வேண்டிய நிலைக்கு வந்துவிட்டதனைப் பகிரங்கப் படுத்தியுள்ளது. எந்த ஒரு தேசமாக இருந்தாலும், ஒரு தனிப்பட்ட குடும்பமாக இருந்தாலும் திட்டமிட்டு வாழ்க்கையை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

ஏழாலை சைவமகாஜனவித்தியாலயத்தில் நடைபெற்ற "குடிசனப் பெருக்கமும் நாட்டின் அபிவிருத்தியும்" கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசிய அதிபர் திரு. த. திருநாவுக்கரசு [நாவேந்தன்] மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு திருநாவுக்கரசு மேலும் பேசியதாவது; எமது நாட்டில் மணித்தியாலத்திற்கு 32 குழந்தைகளும், ஒரு நாளுக்கு 750 பேரும் நாட்டில் அதிகரிக்கின்றனர். நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பத்துலட்சம் மக்கள் சனத்தொகையில் கூடுகின்றனர். இதுமாபெரும் தேசியப்பிரச்சினையாகும். மதத்தலைவர்களும், அரசியல் வாதிகளும் 'குடும்பக்கட்டுப்பாட்டுக்கு' கூறும் நியாயங்களைவிடத் தார்மீகமான வழியில் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியும், தீர்க்க வேண்டும். கடின உழைப்பும், சோம்பலற்ற வாழ்வுமே நாட்டின் அபிவிருத்தியைத் தூண்டும். இவ்வபிவிருத்திக்கு இலவச உணவு முத்திரைகளும் மாதாந்தம் 55 ரூபா இலவச வேதனமும் உதவுமா என்பதனை ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும் உழைப்புக்கு முன்னிடமில்லாத நாட்டின் அபிவிருத்தி கனியாது!"

ஆசிரியர் திரு. இ. இளையராசா செல்வி செ. குலமணி உட்படபலர் உரையாற்றினர்.

மாணவ மாணவிகளுக்கு கேற்படி விடயம் சம்பந்தமான பலபிரசுரங்கள் வழங்கப்பட்டன. [சு]

# இன்று தமிழ்நாடு புறப்படும் யாழ். லீக் தெரிவுக்கோஷ்டி

## 6 போட்டிகளில் கலந்து கொள்ளும்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக் தெரிவுக் கோஷ்டி இன்று தென் இந்தியாவுக்கு உதைபந்தாட்ட சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு பயணமாகிறது.

இக்கோஷ்டி தென் இந்தியாவில் ஆறு உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது.

**போட்டிகளின் விபரம்**

யாழ். தெரிவுக் கோஷ்டி இம்மாதம் 6-ம் திகதி சென்னைத் தெரிவுக் கோஷ்டியுடனும் 8ம் திகதி திருச்சி தெரிவுக் கோஷ்டியுடனும், 9-ம் திகதி தஞ்சாவூர் தெரிவுக் கோஷ்டியுடனும், 10-ம் திகதி வேளாங்கண்ணி மாணவர் தெரிவுக் கழகத்துடனும் 1 -ம் திகதி கருமத்தூர் விளையாட்டுக் கழகத்துடனும், 12-ம் திகதி மதுரை தெரிவுக் கோஷ்டியுடனும் மோதும்.

யாழ் லீக் தெரிவுக் கோஷ்டி 14-ம் திகதி யாழ் நகருக்குத் திரும்பும்.

இருபது வீரர்கள் அடங்கிய வகிக்கும், யாழ் லீக் தெரிவுக் கோஷ்டிக்கு டாக்டர் ஜே பி லி பிலிப் மனேஜராகவும், காரியதரிசி திரு. ஏ தேவராசா உப-மனேஜராகவும், திரு எம் டி தம்பிராசா பயிற்சியாளராகவும், திரு ஆர் சவுந்தரராசா மத்தியஸ்தராகவும் திரு வி. கே ஆறுமுகம் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பிரதிநிதியாகவும் செல்கின்றார்கள்.

## பரியோவான் வெற்றி

[அரியாலை]

யாழ் பரியோவான் கல்லூரிக்கும் யாழ். மத்தியகல்லூரிக்குமிடையே நடைபெற்ற 19வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 3-0 கோல்களால் வெற்றியீட்டியது. [கு]

## நன்றி ஆராதனை

[அரியாலை]

மலேசியாவில் கல்வியமைச்சராகவும் சமூகசேவையாளராகவும் பணிபுரிந்த காலஞ்சென்ற பெரியார் சர். இளந்துரைசிங்கத்தின் ஜீவியத்திற்கு நன்றி தெரிவிக்கும் ஆராதனை யாழ். சுண்டிக்குளி பரி யோவான் ஆலயத்தில் நடைபெற்றது.

முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்ட இந்த ஆராதனையை சுண்டிக்குளி பரி. யோவான் ஆலய பிரதமகுரு அருட்திரு யோ. சர்வானந்தம் அடிகளாரும், அருட்திரு யோசேப் ஐசையா அடிகளாரும் நடத்தினார்கள்.

காலஞ்சென்ற சர். இளந்துரைசிங்கம் அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் மைத்துனராவார்.

## யாழ். ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அகில இலங்கை சம்மேளனத்திற்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திரு. பி. வெற்றிவேலு, சமாதான நீதிபதி திரு. பி. முருகரெத்தினம், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. பி. எஸ். குமாரசாமி ஆகியோர் ஏகமனதாக தெரிவாகினர். [செ]

## தொழிலாளியின் கைவிரல்கள் துண்டிக்கப்பட்டன

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைத் தொழிலாளி ஒருவர், கடைச்சல் இயந்திரத்தினுள் தவறுதலாக கையைச் செலுத்தியதால் விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கழிபுரத்தைச் சேர்ந்த க. பாலசிங்கம் என்னும் தொழிலாளியே இவ்வாறு விபத்திற்குள்ளானவராவர். கடைச்சல் இயந்திரத்தில் வேலைபார்க்கும் இவர், தவறுதலாகக் கையை அதனுள் செலுத்தியதால் விரல்கள் துண்டிக்கப்பட்டன.

உடனடியாகத் தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். (கு)

# பாதிரியாரை பிணையில் விடுமாறு கோரி மனு!

[கொழும்பு]

பாதிரியார் மத்தியூ பீரிஸை பிணையில் செல்ல அனுமதிப்பதா? இல்லையா? என்பதுபற்றி இம்மாதம் 12ந் தேதி முடிவு செய்யப்படவிருக்கிறது.

கொழும்பு பிரதம நீதவான் திரு. டி. பி. எல்லெபொலமுன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யூனிஸ் பீரிஸ், ரஸல் இங்கிராம ஆகிய இருவரும் மர்மமானமுறையில் கொலைசெய்யப்பட்டது தொடர்பாக சந்தேகத்தின்பேரில் பாதிரியார் மத்தியூ பீரிஸ் இங்கிராமின் மனைவி டெல்லிஸ் இங்கிராமின் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பாதிரியார் மத்தியூ பீரிஸ் சார்பில் சட்டத்தரணி சரத் முத்தட்டுகம ஆஜரானார். இரண்டாவது சந்தேகநபரான டெல்ரின் இங்கிராமின் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் [ஜூனியர்] ஆஜரானார்.

பாதிரியார் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சரத்முத்தட்டுகம பிணைமனுவைத் தாக்கல் செய்தார். அரச சிரேஷ்ட சட்டத்தரணி ஜனாப் எம் எஸ் அஹாஹிர் பிணைமனுவை எதிர்த்தார்.

இதையடுத்து நீதவான் பிணைமனுமீது தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 12ந்தேதிக்கு ஒத்திவைத்தார்.

**SHANTHI** JAFFNA Phone: 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 P. M.
MARK FOREST in
Maciste In The Valley Of The Kings
Scope-Color
வீரதீர சாகசச் செயல்கள் நிறைந்தது
VYJAYANTHIMALA in
Next Attraction Amarapali Hindi in Eastman Color

**REGAL** (Jaffna) 3rd CROWDED WEEK LAST FEW DAYS
Daily 10-30 a. m. 2-00, 4-30, 7-00 p.m; only
THE OMEN
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)
From 4-9-79 LOGAN'S RUN

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30 & 9-45. சனி, ஞாயிறு 10-30
றிவோல்வர் ரீட்டா

விடோ (யாழ் நகர்) போன் 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

4th & FINAL WEEK
SRIDHAR-Jaffna Phone: 7345
at 10-30 a m, 3-00, & 7-30 p.m;
Don't miss this great film for the last time in Jaffna
CECIL B DEMILLE'S
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
(புதிய டெக்னிக் கலர்—தமிழில்)
Color
Schools contact Management for Special shows.

ரஜனி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-தேவிகா
சுமைதாங்கி
(புதிய பிரதி)
கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர்

ராஜா யாழ் நகர் கடைசி இரு தினங்கள் மட்டும் தினசரி 4 காட்சிகள்
அன்னமிட்ட கை
(புதிய பிரதி)
6ந் திகதி முதல் சிவாஜி-சாவித்திரி
காத்தவராயன்

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
நாகேஸ்வரராவ் சாவித்திரி
தூய உள்ளம்
6ந் திகதி முதல்
பார் மகளே பார்

வின்ஸர் யாழ்ப்பாணம் (தென்னிந்திய நடிகர்) தினசரி 4 காட்சிகள் காலை 10 30, பி.ப.2-00, மாலை 6-00, இரவு 9-30 (கோலாகலக் காட்சி)
எஸ். வி. சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ்
உதயகுமார்
நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. சங்கர்

# இன்றைய பலன்

ஆவணிமாதம் 18ம் திகதி
திங்கட்கிழமை
[3-9-1979]

மேடம்: பொறியியலாளர்களுக்குப் பொன்னான தினம், புகழும் பொருளும் குவியத் தக்க சந்தர்ப்பம் உண்டு. பொதுவாகத் தொழிலில் வெற்றியுண்டு.

இடபம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும், இனசனம் கூடுவர். புத்திர சுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

மிதுனம்: அதிகாரக்குறைவுக்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுவீர்கள், அதிககவனம் செலுத்த வேண்டும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், அவசர நடவடிக்கையைத் தவிர்க்கவும்.

கடகம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள், காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும், மகிழ்ச்சிகரமான தினம்.

சிங்கம்: இன்னலின் பின்னால் இதயபாரம் அதிகரிக்கும், முதியவர் ஒருவரின் உடல்நலம் கவலையைத் தரலாம், வைத்தியச் செலவுகளுக்கும் இடமுண்டு, சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத நஷ்டமேற்படலாம்.

கன்னி: பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழ்வீர்கள், பிரவழித்தனமும் சேரும், தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும், பெரியோர்கள் ஆசி கூறுவார்கள், புகழும் வந்து சேரும்.

துலாம்: வியாபாரத் துறையில் விருத்தியுண்டு, செய்தொழில் சிறப்படையும், வாழ்க்கையில் சுமுகமான நிலை தென்படும்.

விருட்சம்: பொருள்வரவு திருப்திகரமாக இருக்கும், புத்திரவழியால் புகழும் கிடைக்கும், புதிய உடன்படிக்கையொன்றுக்கு இடமுண்டு, வணிகர்களாயின் வியாபாரத் துறையில் வெற்றியுண்டு.

தனு: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்ளக் கூடும், நிரைமறையில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

மகரம்: மனப்போராட்டம் அதிகரிக்கும், உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம், இதன்மூலம் கைகலப்பும் ஏற்படலாம், பிள்ளையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், பொறுமை நன்று.

கும்பம்: கன்னல் மொழி பேசி காரியத்தை சாதிப்பீர்கள், கவர்ச்சிகரமான சம்பவங்களும் இடம்பெறும், குடும்பத்தில் அமைதி நிலவும், வெளியூர் நண்பர்களின் வருகை மகிழ்ச்சியைத் தரும். சிரவேதகவேண்டியதினம்.

மீனம்: எதிலும் அவசரக்கோலம் தென்படும், சகோதர வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு, எதிர்பார்த்த வரவுகளும் தடைப்படக் கூடும். இளமை நினைவுகள் வேதனையைத் தரும், மனத்திடம் தேவை.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

நாகம்ஸ் (கன்னாதிட்டி)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.
அஞ்சலிதேவி
சக்கரவர்த்தித் திருமகள்

RIO (Jaffna- TwonHall) Phone: 7697
4th & FINAL WEEK
Daily 4 Shows
DRIVER

வெலிங்டன்
[illegible]
தினசரி 4-45, 7-00, 9-30
PERCY

# நீதிமன்றத்தில் காரை தடுத்துவைக்க கட்டளை

[யாழ்ப்பாணம்]

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் கொள்ளை அடிக்கப்பட்டு பின்னர் பொலிசாரால் கைப்பற்றப்பட்ட காரை நீதிமன்றத்தில் தடுத்து வைக்கும்படி நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குத் திருவிழா பார்ப்பதற்காகக் காரில் சென்ற பத்தைமேனி அச்சுவேலியைச் சேர்ந்த முருகேசு யோகநாதன் கோயிலில் இருந்து திரும்பி வந்து காரைக் காணவில்லை என யாழ் பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார்.

யாழ் பொலிசார் கோண்டாவிலில் வைத்துக் காரையும் கோபாலலிங்கம், நவரத்தினம் ஆகியோரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு 2,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ் நீதிமன்றத்தில் நடைபெற்றபோது சந்தேகநபர்களில் ஒருவரான கோபாலலிங்கம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். யோகேஸ்வரன், கார் கோபாலலிங்கத்திற்குச் சொந்தமானதெனவும் அதை அவரிடம் திருப்பி ஒப்படைக்கும்படியும் வாதாடினார்.

முறைப்பாட்டுக்காரரான முருகேசு யோகநாதனின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி இ. நாகராசா சந்தேகநபரிடம் காரை ஒப்படைப்பதை ஆட்சேபித்து வாதாடினார்.

நீதிபதி திரு. இராஜசிங்கம் காரை இம்மாதம் 10ந் தேதி வரை நீதிமன்றத்தில் தடுத்து வைக்கும்படி பொலிசாருக்கு உத்தரவிட்டார். [கொ]

# "உயிர்ப்பலிக்கு ஆலயத்தை கருவியாக்காதீர்"

(யாழ்ப்பாணம்)

பஞ்சமா பாதகங்களுள் கொலை பாதகமே தலையாய பாவமாகும். அக்கொலையைப் புரிவதற்கு ஆலயத்தைக் கருவியாகப் பயன்படுத்தக் கூடாது. ஆலயங்களுக்கு வழங்கப்படும் ஆடு, மாடு, கோழி முதலியன அவற்றின் வழிபட்டவர்களுக்கே விடப்படல் வேண்டும். அவ்வாறு செய்யாமல் தானென்றெண்ணிப் பாவத்தைச் செய்யாதீர்"

பசுப் பாதுகாப்புச் சபைச் சபைச் செயலாளர் திரு மூவைக் வாசனம் நாரந்தனை தாக்கோன்றி மனோன்மணி அம்பாள் ஆலய அடியார்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அம்பாளைப் பூசிப்பதற்குப் பெருந்தொகையான பணம் தேவையில்லை. உள்ளமே போதுமானது. கொலை, களவு, பொய், கள், காமம் ஆகிய ஐந்து மாபாதகங்களையும் நீக்கி வாழ்வதே அம்பாளுக்குப் பிரியமாகும். உயிரினங்களைத் தானமாகக் கொடுக்காது அவற்றுக்குப் பெறுமதியான பணத்தை அம்பாள் அடியார் தானமாகக் கொடுத்து முன்மாதிரி காட்டவேண்டும்" என்றும் திரு. மயில்வாகனம் கேட்டுக்கொண்டுள்ளார். (கொ-ஊ)

# கன்பொல்லை தாக்குதல் வழக்கு: எதிரிகளுக்கு சிறை!

[புலோலி]

கரவெட்டி கன்பொல்லை தாக்குதல் வழக்கில் எதிரிகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கன்பொல்லையைச் சேர்ந்த இராசன் சுப்பிரமணியம், துரையன் தங்கன், குண்டு மணிப்பப்பா அல்லது செல்வராசா என்ற மூவருமே வெள்ளையன் பரமகுருவைப் பொல்லினாலும், பொல்லுகளாலும் தாக்கி காயமேற்படுத்தியுள்ளார்கள் எனப் பருத்தித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு நீதவான் திரு வே ஞானச்சந்திரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரிகளைக் குற்றவாளியாகக் கண்ட நீதவான் 1ம் எதிரிக்கு 2 வருட சிறைத்தண்டனையும், 2 வருட பொலிஸ்கண்காணிப்பும், 2ம் எதிரிக்கு 6 மாத சிறைத்தண்டனையும், 3-ம் எதிரிக்கு 1 வருட சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். [ச]

## 3ம் வார்ட்டில் துர்நாற்றம்

[சித்தன்கேணி]

யாழ். பெரியாஸ்பத்திரி மூன்றும் வார்ட்டில் மிகுந்த துர்நாற்றம் வீசிக்கொண்டிருப்பதால் நோயாளிகளும் பொதுமக்களும் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இந்த துர்நாற்றத்தினால் நோயாளிகள் சாப்பிட முடியாமல் இருப்பதுடன் பொதுமக்கள் நோயாளிகளைப் பார்க்கமுடியாமலும் அவ்வழியே செல்ல முடியாமலும் இருக்கின்றது.

இதுபற்றி மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் எதுவித பயனும் கிடைக்கவில்லை என பொதுமக்களும் நோயாளிகளும் தெரிவித்தனர். [ச]

## இருமாடிக் கட்டிடம்

[புலோலி]

சிலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் சுமார் ஒன்றே கால் இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுவந்த இருமாடிக்கட்டிடத்திற்கான வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

இப்புதிய இருமாடிக்கட்டிடம் இந்தமாத இறுதியில் திறந்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது [க]

## விசேட வகுப்புகள்

[ஏழாலை]

அரசாங்கத்தினதும், கல்வித் திணைக்களத்தினதும் பணிப்புரைகளுக்கமைய ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை விசேடவகுப்புகள் நடைபெற்றுவருகின்றன.

முதியோர்களுக்கான வகுப்புகளும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கான வகுப்புகளுமாக இவை பிரிக்கப்பட்டு நடைபெறுகின்றன.

# அணி சேரா மாநாடு இன்று ஆரம்பமாகும் ஹவானாவில்.....

(ஹவானா)

கியூபா தலைநகர் ஹவானாவில் இன்று ஆரம்பமாகும் அணிசேரா நாடுகளின் ஆறாவது உச்சி மாநாட்டையொட்டி கியூபா தலைநகரம் கோலாகலமாகக் காட்சி அளிக்கிறது.

மாநாடு சம்பந்தமான வேலைகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் துரிதமாகக் கவனிக்க தேசிய தேசிய தயாரிப்பு கமிட்டி ராஜியசபையின் துணைத்தலைவர் ஜுவான் அல்மெய்டா தலைமையில் இயங்குகிறது. சில முக்கிய வேலைகள் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே பூர்த்தியாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநாட்டுக்கென பிரத்தியேகமாக நிர்மாணிக்கப்பட்ட மாளிகை கியூபாவிலேயே மிகச் சிறந்த கட்டமாக திகழ்கிறது.

ராஜியத் தலைவர்களுக்கு விசேஷமாக நிறுவப்பட்ட 150 வாசஸ்தலங்கள் மாளிகைக்கு அருகாமையிலேயே உள்ளன.

ஹவானா, சமாகே விமானநிலையங்கள் புதுப்பிக்கப்பட்டும், நவீனமயமாக்கப்பட்டும் உள்ளன. ஹவானா ஜோஸே மார்ட்டி சர்வதேச விமான நிலையத்தில் இறங்குபாதை 500 மீட்டர் விஸ்தீரணப்படுத்தப்பட்டுள்ளது. கியூபாவின் கிழக்குப் பிராந்தியத்தில் சமாகே நகரிலுள்ள இக்னேசியோ அக்ரமொன்டே விமான நிலையம் ஒருபதில் விமான நிலையமாக இயங்கும்..

தகவல் போக்குவரத்து வசதிகளுக்கு பொறுப்பான அமைச்சர் பெட்ரோ குவெலியின், மாநாட்டுக் காலத்தில் உலகத்தின் சகல பாகங்களுடனும் தொடர்பு கொள்ள சகல வசதிகளும் நிறுவப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார். ஏற்கனவே இருகோளில் உள்ள விண்வெளி தகவல் நிலையம் போக புதிய துணைக்கோள் நிலையமொன்று நிறுவப்பட்டிருப்பது தகவல் தொடர்பு வசதிகளை மேலும் விஸ்தரிப்பதாக உள்ளது.

# சுருட்டுத் தொழிலாளர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

"அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கம், விடுத்த வேண்டுகோளை யடுத்து அதிகமான சுருட்டுத் தொழிலாளர்கள் கடந்த இரு தினங்களாக வேலைகளுக்குச் செல்லாது பகிஷ்கரித்து வருகின்றனர்"

இவ்வாறு மேற்படி சங்கத் தலைவர் திரு ஆ. துரைராசசிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில், "எமது சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று பல முதலாளிமார்கள் 1000 சுருட்டுகளுக்கு வேதனமாக ரூபா 37-50 வழங்க முடிவு செய்திருப்பதாக எழுத்துமூலமாக அறிவித்துள்ளனர். எமது கோரிக்கையை சகல முதலாளிமார்களும் ஏற்று அமுல் நடாத்தும்வரை சகல சுருட்டுத் தொழிலாளர்களும் அமைதியான முறையில் பகிஷ்கரித்து வருவார்கள்" என்றும் அவர் தெரிவித்தார். (செ)

# சுருட்டுத் தொழிலாளரின் வேதனத்தை உயர்த்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"1978-ம் ஆண்டு ஐம்பது ரூபாவும் 1979-ம் ஆண்டு ஐம்பத்தைந்து ரூபாவையும் அரசாங்கம் ஊழியர்களுக்கு வழங்கியபோதும் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு அவை வழங்கப்படவில்லை. சுருட்டுத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கையை முதலாளிமார் ஏற்றுக்கொள்ள வேண்டும்"

இவ்வாறு இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. கி. பொ. வ மா க முதலியார் கூறினார்.

1000 சுருட்டுகளுக்கு ரூபா 37-50 வழங்கவேண்டும் என்றும் அவ்வாறு கொடுக்க முன்வராத தொழிற்சாலையில் வேலை செய்யக்கூடாது என தொழிலாளர்களைக் கோருவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் ச. தங்கராசா, க. விசுவலிங்கம், செ. தம்பிராசா உட்பட பலர் உரையாற்றினர்கள். (கொ-கு)

# சைக்கிளில் வெளிச்சமின்றி சென்ற 35 இளைஞர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்!

(உடுப்பிட்டி)

நெல்லியடி பகுதியில் பருத்தித்துறைப் பொலிசார் மேற்கொண்ட திடீர்வேட்டையின் இரவில் வெளிச்சம் இன்றிச் சென்ற 18 இளைஞர்கள் சைக்கிள்களுடன் பொலிஸ்நிலையம் கொண்டு செல்லப்பட்டனர்.

மந்திகையில் வைத்து 17 பேர் சைக்கிள்களுடன் கைப்பற்றப்பட்டுப் பொலிசாரால் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

ரியூஷன் முடிந்து இரவில் வீடு திரும்பும் மாணவிகளிடம் சேஷ்டைகள் புரியும் வாலிபர்களைக் கண்காணிப்பதற்காகச் சென்றபோதே வெளிச்சம் இன்றிச் சென்ற 35 பேரும் மாட்டிக்கொண்டனர். பிரஸ்தாப 35 பேரும் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (உ)

# துலா தலையில் விழுந்து 5 பிள்ளைகளின் தாய் மரணம்

(பண்டத்தரிப்பு)

கிணற்றில் தண்ணீர் அள்ளும்போது துலாவின் அச்சுலக்கை முறிந்து துலா தலையில் விழுந்ததினால் மண்டை நொருங்கி 5 பிள்ளைகளின் தாயார் ஒருவர் பலியான பரிதாப சம்பவம் இளவாலையிலுள்ள முள்ளானை என்னுமிடத்தில் நிகழ்ந்துள்ளது.

கனகரத்தினம் இராசமுத்து என்னும் பிரஸ்தாப பெண்ணின் மரணவிசாரணை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. தா. தம்பிராசா முன்னிலையில் நடைபெற்றது. விசாரணையின் போது காலமானவரின் மகன் கனகரத்தினம் துரைராசா சாட்சியமளிக்கையில், பகல் 11 மணியளவில் தமது தாயார் வீட்டிற்கு முன்பாகவுள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளும் சமயம் அச்சுலக்கை முறிந்து துலா தாயாரின் தலைக்கு மேல் விழுந்ததாகவும். சத்தம் கேட்டு தாங்கள் ஓடிச்சென்று பார்த்தபோது தாயார் மண்டை நொருங்கிய நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்ததாகவும் உடனடியாக தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப் படுகையில் உயிர் பிரிந்துவிட்டதாகவும் தெரிவித்தார்.

சிவபாக்கியம் என்பவரும் சாட்சியளித்ததைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி தலையில் துலா விழுந்ததினால் மண்டை உடைந்து மரணம் சம்பவித்தது என்று தீர்ப்பு வழங்கினார். சண்டிலிப்பாய் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் திரு. ரூபேட் பசிரால் சாட்சியை ஆஜர்செய்தார்.

## இலவசம்

(யாழ்ப்பாணம்)

ஈரப்பலாக்கன்றுகளை யாழ்ப்பாணம் மிக்கலைத் தோட்ட வனத்தார் இலவசமாக வழங்கி வருகின்றனர். இதனைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் நேரில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## குறுகிய நீண்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகளில் நிறைவுபெறக்கூடியவிதத்தில் மாபெரும் அபிவிருத்தித் திட்டங்கள் உலக வங்கியின் ஆதரவுடன் செயற்படுத்தப்படும். இதன் முன்னோடியாகவே இக் கருத்தரங்கு நடைபெறுகிறது. இதனைத் தொடர்ந்து குழுக்கள் அமைக்கப்பட்டு, அறிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு பல்வேறுதுறை நிபுணர்களின் ஆலோசனை பெறப்பட்டு திட்டங்கள் தீட்டப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு முழுமையான திட்டம் அமைக்கப்பட்டு நீண்டகாலத் திட்டம் நிறைவேற்றப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் மூலவளங்களையும், மனித சக்தியையும் திட்டமிட்ட முறையில் வகுப்பதன் மூலமாக தாங்கள் எடுத்துக்கொண்ட காரியத்தை நிறைவேற்ற முடியும். முதல்முறையாக மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளை திறம்பட செயலாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளில் பாண்டித்தியம் வாய்ந்தவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்

"முதலில் யாழ்ப்பாண மாவட்டத்தின் வளங்களை ஆய்வு செய்து அதன் பின்னர் அவற்றை சரியான முறையில் பாவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். இதன்பொருட்டு ஆறு ஆய்வுக் குழுக்களை நியமித்து அடுத்த மாதம் 30-ந் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்குமாறு வேண்டியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (உக)

## மனச்சாட்சியை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லோகசபைக் கலைப்பு விஷயத்திலோ நான் நாட்டு நலனின் அடிப்படையில் எனது மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு எவ்வித விருப்பு வெறுப்பு மின்றியே செயல்பட்டேன்" என்று தெரிவித்துள்ளார்.

## வீடுதேடிச் சென்று மீன் விற்பனை!

(புலோலி)

பருத்தித்துறைப் பகுதி மக்களுக்குத் தேவையான மீன் தினமும் அவர்களின் வீடு தேடிச் சென்று கிடைக்கப் போகிறது.

இப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான மீனைப் பெற்றுக் கொள்வதற்கு அனுபவித்து வந்த கஷ்டங்களை நீக்குவதற்கு பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்ததற்கிணங்கவே இப்பகுதி மக்களின் வீடுகளுக்கு மீனைக் கொண்டு சென்று விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் மீன் விற்பனைக்கென 5000 ரூபா செலவிடப்படுமென சங்கப் பொது முகாமையாளர் திரு. என். கனகசேகரன் தெரிவித்தார்.


## அறிவித்தல்

வட இலங்கை நகை வியாபாரிகள் சங்கம்

7-வது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் ஏழாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் (3-9-79) திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு சங்க அலுவலகத்தில் (A. K. S. மேல்மாடியில்) நடைபெறும். எங்கள் தொழிலைப் பாதிக்கும் சில முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்து ஆலோசிக்க வேண்டியிருப்பதால் எல்லா நகைக் கடைக்காரரும் தவறாது சமுகமளித்தல் விரும்பத்தக்கது.

இணைக் காரியதரிசிகள் :

உ. கந்தசமி

மூ. அ. மு. சுபைர்

3465



## மக்கினௌன் டிரவல்சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்

Mackinnon Travel Service (Ceylon) Ltd

தங்களது இளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.

இங்கு
- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- சுற்றுலாக்கள்
- பாஸ்போட்
- விசா

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்;

உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினௌன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.

மக்கினௌன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!



சாவகச்சேரி இந்துக்கல்லூரி

எழுபத்தைந்தாண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் - 1979.

7-9-'79 வெள்ளிக்கிழமை மாலை 6-00 மணி தொடக்கம் சுப்பிரமணியம் அரங்கில் நடைபெறும்

பேராசிரியர் ஏ. ஏ. ஊவர் அவர்கள்

[தலைவர், மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்]

பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

1-9-79 அதிபர், ஆசிரியர், மாணவர்கள்

சாவகச்சேரி

குறிப்பு: [தனிப்பட்ட அழைப்புகள் இல்லை] 3471


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டுமாதம் செப்டம்பர் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No 49. Telegram Eelanadu, T.Phone 389.